# தராசு

...—0
...—4—0
0—1—6
...ல, போர்டுகளுக்கு
... ரூ. 15—0—0

போர் 13 | திருச்சி 22--7—45. பார்த்திப-ஞு ஆடி-மீ எ-உ | வெற்றி 17

## ரயில் புறப்பட்டுவிட்டது

"என்ன ஓய் மலையாளம்! இன்னும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறீர்! நீர் பிரயாணம்செய்யவேண்டிய ரயில் புறப்படப்போகிறதே." என்று திருச்சி ஜங்ஷன் சிற்றுண்டிச் சாலையில் உணவு அருந்திக் கொண்டிருந்த கேரளநாட்டுப் பிரயாணியைப் பார்த்து, தமிழ் நாட்டுப் பிரயாணி ஒருவர் கூறினார். அதற்கு அந்த மலையாளி தன் சட்டைப் பையிலிருந்த டிக்கட்டை எடுத்துக் காட்டி, "எந்தாய்யா, சீட்டு என்கிட்டே இருக்கிறது என் சாமானையும் அதே வண்டியில் தான் வச்சிருக்கிறேன். சீட்டும் நானும் இங்கே இருக்கிறபோது சாமான் வச்ச வண்டி நான் போகுமுன் எப்படி நகரும்? அது போகவே போகாது" என்று வீராப்போடு பதில் சொல்லிவிட்டு சாப்பிடும் காரியத்தில் கவனஞ் செலுத்தலானான் மலையாளி.

* * *

மலையாளி பதிலின் தாத்பரியத்தைத் தெரிந்துகொண்டீர்களா? கேளுங்கள் சொல்கிறேன். பிரஸ்தாப மலையாளி ஒரு ரயில் பிரயாணி. தென் மலையாளம் ஜில்லாவிலிருந்து திருவனந்தபுரம் போகவந்த பேர்வழி அவர் கிரமப்படி திருச்சி ஜங்ஷனில் வண்டி மாறினார். திருவனந்தபுரம் போகும் ரயிலில் தனது சாமான்களை எடுத்து வைத்து, அவற்றை அருகிலிருந்தவர்களைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, பசியாறுவதற்காக இந்தியர் சிற்றுண்டி விடுதிக்குச் சென்று உணவு அருந்தினார். அவர் திருவனந்தபுரம் போகவேண்டியவர் என்பதை அறிந்த மற்றொரு பிரயாணி, அவரைத் துரிதப் படுத்துவதற்காகவே மேற்கண்ட விதமாக எச்சரிக்கை செய்தார். ஆனால் அந்த மலையாளி அதைப் பொருட்படுத்தாமல், பதில் சொல்லிவிட்டு சாவதானமாகச் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தார்.

* * *

எச்சரிக்கை செய்தும் அவர் காலதாமதம் பண்ணிக்கொண்டிருந்ததன் காரணத்தை அறிந்தால் நமக்கெல்லாம் சிரிப்பாகத்தான் இருக்கும். டிக்கட் வாங்கினவர்களையெல்லாம் வண்டியில் ஏற்றிக்கொள்ளாமல் ரயில் புறப்படாது என்பது மலையாளியின் நம்பிக்கை. சீட்டு (டிக்கட்) வைத்திருப்போர் அனைவரும் வண்டியில் ஏறிய பிறகுதான் அது புறப்படும் என்பது அவனது எண்ணம். அதே தைரியத்தால்தான், வேறொருவர் எச்சரிக்கை செய்தும் ரொம்ப நிதானத்தோடு சாப்பிட்டார்.

ஃ ஃ ஃ

திருப்தியாக சாப்பிட்டுவிட்டு, தான் ஏறிப் போகவேண்டிய ரயில் நின்ற பிளாட்பாரத்துக்குப்போனார் அந்த மலபார் பிரயாணி பிளாட்பாரம் வெறிச்சென்றிருந்தது. வண்டி நின்ற தண்டவாளம் (லையின்) காலியாகக் கிடந்தது. கதை எதற்கு? சீட்டு அவரிடம் இருந்தும், அவரை ஏற்றிக்கொண்டுதான் புறப்படவேண்டுமென்று கொஞ்சங்கூட நிதானிக்காதபடியே, அவர் வைத்த சாமான்களையும் இதர பிரயாணிகளையும் சுமந்துகொண்டு வண்டி புறப்பட்டுவிட்டது. மலையாளி தவியாய்த் தவித்தார். என்ன செய்ய முடியும்? வண்டி போயே போய்விட்டது!

## பேனா நர்த்தனம்

—"கேசரி"—

* * *

சென்ற வாரம் 14-7-45-ந் தேதி "குடி அரசு" பத்திரிகையில் தோழர் ஈ. வெ. ரா. எழுதியிருக்கும் உப தலையங்கத்தைப் பார்த்ததும், மேலே எடுத்துக் காட்டிய மலையாள தேசத்து ரயில் பிரயாணியின் ஞாபகந்தான் எனக்கு வந்தது.

* * *

தென் இந்திய மக்களின் கலாச்சார இயக்கத் துறையில் மகத்தான சேவை செய்து வந்த சுயமரியாதை இயக்கம் இப்போது சீர்குலைந்து கிடக்கும் நிலையை நீங்கள் அறிவீர்கள். ஒளிவு மறைவின்றி உள்ளதைச் சொல்லவேண்டுமானால் சுயமரியாதை இயக்கம் அடங்கிவிட்டது என்று கூறுவதுதான் பொருத்தமாகயிருக்கும். "வளர்த்தகடா மார்பில் பாய்கிறது" என்பதுபோல, அவர் ஜஸ்டிஸ் கட்சியாரை நீச வார்த்தைகளால் ஏசிக் குலைப்பதற்கும், 'ஏறிய ஏணியை எட்டித் தள்ளிய' முறையில் உறுதுணையாயிருந்த பிரமுகர்கள்மீது வசைலாவணி பாடுவதற்கும், தமது இஷ்டத்துக்கு மாறுபட்டார் மீது சூது வாது தெரியாத இளைஞர்களை ஏவிவிடுவதற்குந்தான் அந்த இயக்கத்தின் பெயரை ஈ. வெ. ரா. உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றாரே தவிர, முன்போல அதன் வளர்ச்சியை நாடி, கொள்கைகளைப் பரப்ப சிறிதும் சிரத்தை கொள்வதில்லை. பரிதாபத்துக்குரிய இந்த நிலையை உணர்ந்த சுயமரியாதை ஆஸ்ரமத்தின் பூர்வவாசிகள், அதைப் புனருத்தாரணம் செய்வதற்காகவும் மீண்டும் அந்த இயக்கம் உருக்குலைந்துபோகாமல் காப்பதற்கும் உருப்படியான மார்க்கத்தைத் தேடியிருக்கிறார்கள். அந்த ஏற்பாடு ஈ. வெ. ரா. வின் எதேச்சையான சர்வாதிகாரத்தனத்தை மட்டந் தட்டுவதாயிருப்பதால், இப்போது அவர் அவர்களுடைய முயற்சியைக் குறித்தும் தூற்றத் தலைப்பட்டுவிட்டார்.

* * *

தோழர்கள் ஊ. ப. அ. சவுந்திரபாண்டியனைத் தலைவராகவும், கி. ஆ. பெ. விஸ்வநாதனை உப தலைவராகவும், எஸ். ராமநாதனைக் காரியதரிசியாகவும், ராவ் பஹதூர் வி. வி. ராமசாமியை பொக்கிஷதாரராகவும் மற்றும் கும்பகோணம் சாமி சிதம்பரனார், பூவாளூர் அ. பொன்னம்பலனார், கோவை சனகசங்கர கண்ணப்பர், கானாடுகாத்தான் வயிசு ஷண்முகம், தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி, மதுரை எ. வேணுகோபால், சித்தயங்கோட்டை வி. எஸ். எஸ். மணி, உடுமலை பி. பி. ராமசாமி, திருமங்கலம் எ. பி. ஆர். சுந்தரபாண்டியன், சோளவந்தான் டி. ஆவுடையப்பன் முதலியோரை நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் வைத்து சுயமரியாதைச் சங்கம், (Self-Respect League), சொஸைட்டிகளின் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டம் 1860-ம் வருஷத்திய மூன்றாவது பிரிவுப்படி சென்ற 10—7—45ந் தேதி மதுரையில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சேதியைக் கேள்விப்படும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களாகவும் அனுதாபிகளாகவும் இருக்கின்ற எல்லாரது மனமும் குளிரும், உள்ளம் மகிழும், நெஞ்சு நிமிரும், புஜம் பெருக்கும்!

* * *

இப்பேர்க்கொத்த அருமையான காரியம் பல வருஷங்களுக்கு முன்னதாகவே முடிவுற்றிருக்கவேண்டும். அதுவும் ஈ. வெ. ரா. அவர்களாலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும். அக்காலத்திலேயே அவரால் அது பூர்த்தி பெற்றிருக்குமானால் சுயமரியாதை இயக்கம் ஸ்தாபன ரீதியாக முன்னைவிட இப்போது எங்கும் வியாபித்திருக்கும். கொள்கைகளும் வேரூன்றிப் படர்ந்திருக்கும். சேகரிக்கப்பட்ட பணம், கேட்பார் மேய்ப்பார் அற்றுப் போகாதபடி, கணக்குத் தணிக்கையுடன் பெரு நிதியாகக் குவிந்திருக்கும். ஆனால் அதைப் பற்றி ஈ. வெ. ரா. கவலைப்படவில்லை. அரசியல் கட்சியில் தீவிரப் பங்கு கொண்டதால் சுயமரியாதை இயக்கத்தை மாற்றாந்தாய் குழந்தையாகக் கைவிட்டார். அப்படியிருந்தும் சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாகாண மகாநாட்டில் தலைமை வகித்த சவுந்திரபாண்டியனும் ஆரம்ப முதல் அதன் காரியதரிசியாக இருந்துவரும் எஸ். ராமநாதனும் பெரு முயற்சி செய்து சங்கத்தை இப்போது ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். அவர்களின் சிரமத்துக்கு வந்தனஞ் செலுத்தி, அவர்களது செயலைப் பாராட்டி வரவேற்கவேண்டிய ஈ. வெ. ரா. இப்போது அவர்களின் இடுப்பை முறிக்க எத்தனிக்கிறார்; அவர்களை 'போலிகள்' என்றும் 'போட்டிக்காரர்கள்' என்றும் அடைமொழி மகுடஞ் சூட்டி தாக்கத் தொடங்கிவிட்டார். என்ன கேடுகாலமோ தெரியவில்லை, நம் சமுகத்தைப் பிடித்த பீடை இன்னுந் தொலையவில்லை!

* * *

குடி அரசின் குட்டித் தலையங்கத்தில் ஈ. வெ. ரா. எழுதியிருப்பதில் ரெண்டொரு வாக்கியங்களைச் சொல்கிறேன் கேளுங்கள். "மதுரையில் தோழர்கள்......சேர்ந்து சுயமரியாதைச் சங்கமென்று ஒன்றை ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்துகொண்டிருப்

(8-ம் பக்கம் பார்க்க)

## ப...

### "கைம்மை... காரிகை..."

வெளியீடு:-பூங்கொடிப்... பகம். ஆசிரியர்: எஸ். சிவப்பிரகாசம். கிடைக்குமிடம்: பூங்கொடிப் பதிப்பகம், சென்த் தெரேஸ் வீதி, புதுச்சேரி. விலை அணு 0—4—0.

கணவனை இழந்த காரிகைகள் கைம்மையால் அனுபவிக்கும் பல துன்பங்களும் நாட்டில் நீக்கப்படவேண்டும் என்ற கருத்துக் கொண்டு ஆசிரியர் இப்பாடல்களை இயற்றியிருக்கிறார். நூலில் காணப்படும் கருத்து கணவனை இழந்தவள் உயிர்வாழச் சகியாது உடன் கட்டை ஏறுவது. இக்கொடிய பழக்கத்தை வெறுக்கும் ஆசிரியர் அதையும் கண்டித்துச் சில பாடல்கள் குறிப்பிடாது விட்டது பலவித சந்தேகங்கட்கு இடமளிப்பதாகயிருக்கிறது. எளிய முறையில் பாடல்கள் அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

### "ரூ. 13,000 பூச்சாண்டி"

ஆசிரியர்: வி. பி. கார்னிக். தமிழ்படுத்தியவர்: டி. ஆர். நடராஜன். வெளியீடு: ராடிகல் பிரசுரம். கிடைக்குமிடம்: தமிழ்நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சி, 77B: ஹாரிஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ். விலை அணு 0—4—0.

இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்திற்காக சர்க்கார் தரும் ரூ. 13,000 கிராண்டைப் பற்றி, பல தேசியப் பத்திரிகைகளும் சம்மேளனத்தின் மாஜி தலைவர் ஜம்னுதாஸ் மேத்தாவும் பல குற்றச்சாட்டுகளுடன் விஷமப் பிரசாரம் செய்வதற்குத் தக்க சான்றுகளுடன் இதில் பதில் கூறப்பட்டிருக்கிறது. பல வகையில் பொதுஜனங்களிடம் வசூலிக்கப்பட்டு, சர்க்காரிடமுள்ள பணத்தைப் பெற்று, பொதுஜன நன்மைக்காக எந்த வகையில் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை விளக்கிக் காட்டுவதோடு, கட்சியின் நோக்கத்தையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது இந்தப் புத்தகம்.

### "மக்களின் கட்சி"

வெளியீடு: ராடிகல் பிரசுரம். ஆசிரியர்: கே. கே. சின்ஹா. மொழி பெயர்த்தவர்: டி. ஆர். நடராஜன். விலை அணு 0-6-0.

பொருளாதார—சமூகத் துறைகளில் நாட்டு மக்கள் இருக்கும் நிலை; ஜாதி மதம், நிறத் துவேஷம் வகுப்புப் பூசல் முதலியவற்றால் ஏற்பட்டுள்ள தொல்லைகள்; ராடிக்கல் டெமாக்ரட்டிக் கட்சியின் கொள்கை—திட்டங்கள் முதலியன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

...ய ...மிழ் ...ணயில் நிற்கப் போகிறதென்று உறுதி எனக்கேற்பட்டிருக்கிறது.

டி. கே. எஸ். & சகோதரர்களின் "ஔவையார்" நாடகத்தின் மூலம் இப்பொழுதே அதை நிரூபித்துவிட்டார்கள்" என்று ஔவை நாடகப் பொன் விழாவிற்கு 10—7—45-ந் தேதியில் தலைமை வகித்த தோழர் எப். ஜி. நடேசய்யர் அவர்கள் குறிப்பிட்டார். ஔவை நாடகத்தை எழுதிய பி. எதிராஜ் அவர்களுக்கு கம்பெனியாரால் பொன் பதக்கம் வழங்கப்பட்டது. நகரக் கல்லூரிகளின் சார்பில் நேஷனல் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் தோழர் சீதாராமய்யர் அவர்கள் பாராட்டிப் பேசி பரிசளித்தபின் டி. கே. பகவதி நன்றி கூற விழா இனிது முடிவு பெற்றது.

### "திருமழிசை ஆழ்வார்" வெள்ளி விழா

ஸ்ரீ ராமபால கான விநோத சபையினர் சென்னை சுகுண விலாஸ் சபையினர்கட்காக ஒரு விசேஷ நாடகம் 14-7-45-ல் நடத்திக் கொடுத்தனர். சபைத் தலைவரும் ஹைகோர்ட் நீதிபதியுமான திவான் பகதூர் கே. பி. லெட்சுமணராவ் அவர்கள் நாடக சபா அதிபர் வைரம் அருணாசலம் செட்டியார் அவர்கள் கலைத் தொண்டைப் புகழ்ந்து பேசி, சுகுண விலாஸ் சபாவின் சார்பாக ஓர் வெள்ளிக் கோப்பை பரிசளித்தார்.

ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார் அவர்கள் தலைமையில் 16-7-45-ல் "திருமழிசை ஆழ்வார்" வெள்ளி விழா நடைபெற்றது. நாடகப் புரவலர் வைரம் அருணாசலம் செட்டியார் அவர்கள் தலைவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். நாடகக் கலை முன்னேற்றம் அடைந்ததற்கு அடையாளமாக இந் நாடகம் அர்த்தபுஷ்டியுடன் ஆபாசம் இல்லாமல் அமைந்திருக்கிறதென்றும் பாம்பு முதலிய உயிருள்ள பிராணிகள் நடிப்பதையும் பற்றி தலைவர் புகழ்ந்து பேசினார்.

### 1000-ரூபாய் அபேஸ்

ரிசர்வ் பாங்க் மைலாப்பூர் கிளையில் குடை கம்பெனியின் குமாஸ்தா ஒருவர் 1000-ரூ. நோட்டுகளை எண்ணிக்கொண்டிருக்கையில், தந்திரமாக பக்கத்திலிருந்தவர் தட்டிக்கொண்டு போய்விட்டார் என்பதாகக் கூறப்படுகிறது.

### ...ஔவையார்" நாடகம் ...மக்கல் கவிஞரின் விஜயம்

டி. கே. எஸ். சகோதரர்கள் முனிசிபல் பப்ளிக் ஹாலில் 6-வது வாரமாக நடத்திவரும் "ஔவையார்" நாடகம் 24-6-45ல் நாமக்கல் கவிஞரின் முன்னிலையில் நடைபெற்றது.

டி. கே. பகவதி கவிஞருக்கு நன்றி கூறி, மாலை சூட்டியபின், கவிஞரவர்கள் "ஔவையை"ப் பாராட்டி, "சுமார் 25 ஆண்டுகளாக நான் நாடகங்களைப் பார்த்து வருகிறேன். "ஔவை" நாடகத்தைப்போல் உயர்ந்த நாடகத்தைப் பார்த்ததேயில்லை. தமிழ்நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டும் இந் நாடகத்தை மேடைக்குக் கொண்டுவந்த சகோதரர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்" என்று கூறி தமிழன் பண்டைப் பெருமையையும், தமிழ் மொழி எப்படிச் சிறப்புடையது என்பதையும் பற்றி விரிவாகப் பேசினார்.

### முக்குலத்தோர் நடுத்தரப்பள்ளி திறப்பு விழா

திருவெறும்பூரில் திருச்சி ஜில்லா முக்குலத்தோர் சங்கத்தின் சார்பில் நிறுவப்பெற்ற நடுத்தரப்பள்ளி 15—7—45-ல் ராவ்சாகேப் எஸ். நித்தியானந்தம் எம். ஏ. அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளி கட்டுவதற்கு உரையூர் மே. சு. நடேசம் பிள்ளை அவர்களால் 3 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்ட கல் சாசனத்தை திரு. கோதண்டபாணி மூவரையர் நாட்டுவித்தார். திருவாளர்கள் அரங்கசாமி, பிச்சையா நாட்டார், வேதாசலம், டி. சாம்பசிவம் முதலிய பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

---

# வடாற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சியின் (தெ. இ. ந. உ. ச) 4-வது மகாநாடு

## 29—7—45-ஞாயிறன்று

## ஆற்காடு ஜோதி தியேட்டரில் நடைபெறும்

தலைவர்:—P. பாலசுப்பிரமணியம், ஆசிரியர், 'சண்டே அப்சர்வர்" சென்னை.

திறப்பாளர்:—திவான் பஹதூர் C. S இரத்தினசபாபதி முதலியார், கோவை.

கொடி போடுவோர்:—J. S. கண்ணப்பர், கோவை.

நாயர் படத் திறப்பாளர்:—மண்டலத் தலைவர் சர். R. K ஷண்முகம் செட்டியார், கோவை.

தியாகராயர் படத் திறப்பாளர்:—மண்டலத் தலைவர் B. ராமச்சந்திர ரெட்டியார், நெல்லூர்.

பனகால்ராசர் படத் திறப்பாளர்:—தலைவர் சர். P. T. ராஜன்.

முனிசாமி நாயுடு படத் திறப்பாளர்—"அக்நிகுலபோதினி" ஆசிரியர் B. V. நாராயண, மசூலிப்பட்டணம்.

பொப்பிலிராஜா படத் திறப்பாளர்:—K. A. P. விஸ்வநாதம், திருச்சி.

டாக்டர் நடேச முதலியார் படத் திறப்பாளர்:—சேர்மன் P. இரத்தினசாமி பிள்ளை, சேலம்.

பன்னீர்செல்வம் படத் திறப்பாளர்:—சேர்மன், ராவ் பஹதூர் A. Y. அருளானந்தசாமி நாடார், தஞ்சை.

ஜே. என். இராமநாதன் படத் திறப்பாளர்:—முனிசிபல் கவுன்சிலர் A. வேணுகோபால், மதுரை.

டி. வி. சுப்பிரமணியம் படத்திறப்பாளர்:—S. பொருட்செல்வியார்.

ஓ. சி. சீனிவாசன் படத் திறப்பாளர்:—சுவாமி ஷண்முகானந்தா, சென்னை.

வரவேற்புத் தலைவர்:—கவுரவ மாஜிஸ்ட்ரேட் V. N. செல்வராஜ முதலியார், ஆற்காடு.

பொதுக் காரியதரிசி:—K. M. அண்ணல் தங்கோ.

பொருளாளர்:—V. P. திருவேங்கட முதலியார், ஆற்காடு.

---

28-7-45 சனி, 29-7-45 ஞாயிறு மாலையில் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். ஒலி பெருக்கி உண்டு.

# இந்தூருக்கு முன்

—சரித்திரக் கதை

S. S. நாயனர்

**1857**-ம் வருட சுதந்திர யுத்தம் பிரிட்டிஷ் ஆட்சியையே வேருடன் அசைத்தாட்டிய விடுதலைப் போராட்டத்தின் பிற்பகுதி. டில்லி, லட்சுமணபுரி கான்பூர் முதலிய புரட்சிப் படைகளின் அரண்கள் வீழ்ச்சியுற்றன. சுதந்திரக் கொடியுடன் நகரம் ஒன்றுகூட இல்லாது போயிற்று. மீண்டும், எங்கும் பிரிட்டிஷ் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டு வரும் சமயம், விடுதலைப் போரின் ஒப்புயர்வற்ற தலைவர்களைச் சர்க்கார் படைகள் எங்கும் தேடித் திரிந்தன. எங்கும் அடக்கு முறைப் பேயின் வெறியாட்டம்! ரத்தப் பெருக்கு!

### பிரிட்டிஷ் சல்லடை

கான்பூரில் புரட்சித் தலைமை வகித்த மகராஷ்டிர வீரன் பீஷ்வா நானாசாகிப், அவனது உறுபடைத் தோழனும் யுக்த தந்திர மிக்க தாந்தியாதோபி, பிரிட்டிஷ் படைத் தளகர்த்தர்களால் புரட்சிப் படைத் தலைவர்களுள் தலைசிறந்தவர் எனப் போற்றப்பட்ட ஜான்ஸிராணி ஆகியோர் எங்கே, எங்கே என்று பிரிட்டிஷ் படைகள் வட இந்தியா முழுதும் சல்லடை போட்டு சலிப்பதே போல் பரந்து திரிந்து தேடிக்கொண்டிருந்தன.

அத் தலைவர்கள் எங்கே? அவர்கள் இன்னோரிடம் நாளை போரிடமாக சர்க்கார் படைகள் வசம் அகப்படாமல் தப்பித் திரிந்தனர். சும்மா இருந்தனரா? இல்லை. மீண்டும் புரட்சிக் கொடியை எங்கு நாட்டுவதென்ற ஆலோசனையே அவர்கள் உள்ளத்தில் முதன்மை பெற்றிருந்தது. உண்மை வீரனுக்குத் தோல்வி அழியா ஊக்கந் தரும்; அவன் உள்ளம் உறுதி பெறும்.

### இந்தூருக்கு புறப்பாடு

மீண்டும் எங்கு புரட்சிக் கொடியை நாட்டுவதென அவர்கள் ஆலோசனை செய்ததில் இந்தூர் சிறந்ததெனக் கொண்டனர் அத் தலைவர்கள். அக் கோட்டை மத்தியமான ஸ்தலமென்பதும் வடநாட்டில் சிதைந்து திரிந்துவரும் படைகள் மறுபடியும் அங்கு ஒருங்கு சேர வசதி ஏற்படுமென்பதும் அவர்கள் கருத்து. இந்தூர் மன்னருக்கு ரகசியத் தூது அனுப்பப்பட்டது.

அவர் நல்வரவேற்பு அளிப்பதாகப் பதில் வந்தது. உடன் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்த உள்ளத்துடன் இந்தூர் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. எழுவோ, வீழுவோ, தங்களுடன் உறுதியாயிருந்த சிறு வீரப் படையுடன் மூன்று தலைவர்களும் இந்தூருக்குப் புறப்பட்டனர். தங்களைத் தேடித் திரியும் அன்னியப் படைகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இச் சிறு படை இந்தூரை அணுகியது.

### கோட்டை முன்

ஜான்ஸிராணி லட்சுமிபாய் தன் ஒப்புயர்வற்ற அசுவத்தில் வந்துகொண்டிருக்கிருள். அவளது வீரத் தோழியராம் காசியும், மந்தாரையும் பொறுக்கி எடுத்த சுமார் முந்நூறு குதிரை வீரர்களும், நெருங்கி அணிவகுத்து வந்தனர். நானுசாகிப், தாந்தியாதோபி இருவரும் தங்கள் சிறு படையுடன் அடுத்து வந்துகொண்டிருந்தனர். இந்தூர் கோட்டை அப்படையின் கண் முன்பு தோன்றியது. உடன் உற்சாகம் பொங்கி எழ புரட்சிக் கோஷம் எழுந்தது. சுதந்திர யுத்தம் மீண்டும் ஆரம்பிக்க இருப்பதில் அவர்களுக்கு இந்த ஆர்வத்தை யாரே எடுத்துரைக்க வல்லார்!

புரட்சிப் படை முன்னேக்கிச் சென்றது. இப் படையின் வருகையை யறிந்து இந்தூர் கோட்டையிலிருந்து பெரும் குதிரைப் படையொன்று அதிவேகத்துடன் புறப்பட்டு வந்தது. புரட்சிக் கொடி தவழ, பாய்ந்து வரும் அப்படையின்முன் இந்தூர் மன்னர் ஓருயர்ந்த குதிரை மீது வந்துகொண்டிருந்தார். மன்னரையும், படையையும் கண்டு புரட்சிப் படை பெரும் ஆரவாரத்துடன் முன் சென்றது. எதிரில் வரும் படையில் புரட்சிக் கொடியிருப்பினும் அமைதியே நிலவியது.

இருதிறப் படைகளும் அதிவேகத்துடன் நெருங்கிக்கொண்டிருந்தன. நானுசாகிப், தாந்தியாதோபி ஆகிய இருவர் மனதிலும் பெருமகிழ்ச்சி நிலவியது. அவர்கள் அதிக உற்சாகத்துடன் மீண்டும் நடைபெறவிருக்கும் விடுதலைப் போரை நினைந்து கொண்டே வந்து கொண்டிருந்தனர். இந்தூரில் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய படை வலிமையைப்பற்றியும் அவர்கள் மனம் சிந்தித்துக்கொண்டிருந்தது.

### துரோகம், துரோகம்!

ஆனல் ஜான்ஸி லட்சுமிபாய் மனதுள் சந்தேகம் எழுந்தது. இந்தூர் மன்னர் பெருங் குதிரைப் படையுடன் மட்டும் வருவது சரியல்லவெனவும், அச் சந்தர்ப்பத்திற்குத் தக்கதல்லவெனவும் அவள் மனதில் பட்டது. ஏராளமான மக்களும், இதர படைகளும் உற்சாகத்துடன் தங்களை வரவேற்கும் என்பது அவள் நம்பிக்கை. அதற்கு மாருக அணிவகுத்து, சவ ஊர்வலம்போல அமைதியுடன் வரும் குதிரைப் படை, ராணுவ அறிவு மிக்க ஜான்ஸியின் உள்ளத்தில் சந்தேகத்தைக் கிளப்பியது ஆச்சரியமல்ல!

இந்தூர் மன்னர் துரோகப் புத்தியுடன் வருவதாக உணர்ந்தாள். எதிரில் வரும் படையை எதிர்த்துத் தாக்கி மன்னரைச் சிறை செய்யாவிடில் தாங்கள் உயிர் தப்புவது அரிதெனக் கொண்டாள். இதை மற்ற தலைவர்கள் உணரவில்லை என்பதையும் கண்டதால் தன்னந் தனியாகவே நடவடிக்கை யெடுப்பதெனக் கொண்டாள்.

உலகிலேயே ஒப்பற்றதென ஜான்ஸி குதிரைப் படை புகழ் பெற்றிருந்தது. வெள்ளைப் படைகளே ஜான்ஸிப் படையின் வீரத் தாக்கை எதிர்த்து நிற்கத் தாளாது பன்முறை புறமுதுகு காட்டி யோடியுள்ளதனின் அதன் வீரத்தையும் உறுதியையும் கூறவேண்டுமோ!

ஜான்ஸிராணி தன் படையினரை மட்டும் அதிவேகத்துடன் விரைந்து முன் செல்ல ரகசிய உத்திரவிட்டாள். அப் படை அதிவேகத்துடன் முன் பாய்ந்து சென்றது. இதர தலைவர்கள்படை பின் தங்கியது. இப் புதிய வேகத்திற்கு ஜான்ஸியின் பேருக்கமே காரணமென அவர்கள் நினைத்தனர்.

ஜான்ஸி குதிரைப் படை தங்களை விரைவில் வந்து அணுகவே பாய்ந்து வருவதாக இந்தூர் மன்னர் நினைத்தார். தம் படையுடன் பெரு நம்பிக்கையுடன் அவர் நெருங்கி வந்து கொண்டிருந்தார். பெருவேகத்துடன் வந்த ஜான்ஸிப் படை சமீபத்தில் வந்ததும் இந்தூர் முன்னணிப் படையை அதி உக்ரத்துடன் தாக்கியது. அதன் பலனைக் கூறவும் வேண்டுமோ! படை சிதறுண்டு நாலுபக்கங்களிலும் ஓடியது. மன்னர் தன் தீய நினைவின் பலனுகச் சிறை பிடிக்கப்பட்டார். மேலும் பலர் சிறையுண்டனர்.

ராணி இலட்சுமிபாயின் இச் செய்கை நானுசாகிப், தாந்தியா தோபி ஆகிய இருவரையும் திக்பிரமையடையச் செய்தது. அவர்களும் விரைந்து வந்து ராணியிடம் ஆத்திரத்துடன் இதன் காரணம் கேட்டனர்.

உடன் இலட்சுமிபாய், "தோழர்களே! நீங்கள் உண்மை அறியாது போனீர்கள். நம்மைச் சிறை பிடிக்கவே மன்னர் சதி. அதுவே அவர் தனித்துக் குதிரைப் படையுடன் வந்ததன் நோக்கம். எங்கும் உள்ள அமைதி உங்கள் உள்ளத்தில் தைக்கவில்லையா? மக்களின் உற்சாக மெங்கே? கோட்டைக்குள் சென்ருல் உண்மை விளங்கும். விரைந்து கோட்டைக்குள் செல்வோம். வருக" எனக் கூறினள்.

### உண்மை துலக்கம்

ஜான்ஸிப் படையும், தலைவர்களும் வெற்றியுடன் இந்தூர் கோட்டைக்குள் சென்றனர். புரட்சி உணர்ச்சி மிக்க காலாட் படைகள், ஆயுதங்கள் பறிக்கப்பட்டு காவலிலிருப்பதை அவர்கள் கண்டனர். வெற்றியுடன் வந்த தலைவர்களைக் கண்டதும் பெரும் புரட்சி கோஷம் செய்து ஆரவாரித்தனர். இரு படைகளின் வீரர்களும் ஒருவரை ஒருவர் பெரும் மகிழ்வுடன் தழுவிக் கொண்டனர். நகர மக்களும் பேரன்புடன் வரவேற்று உபசரித்தனர். மன்னரின் துரோகச் செயலை மக்களும், வீரரும் வெளியிட்டனர். துரோகம் வெட்ட வெளிச்சமானது. மன்னர் சிறையிலடைக்கப்பட்டார். புரட்சிக் கொடி இந்தூர் கோட்டைமீது பறக்கவிடப்பட்டது. பெருஞ் சதியிலிருந்து தாங்கள் தப்பியதில் தலைவர்கள் பெரு மகிழ்வுற்றனர். புரட்சிக் கொடி மீண்டும் துரோகத்திலிருந்து தப்பி நாட்டப்பட்டதில் மக்களின் ஆர்வங் கூறத் தகையதே!

---

### சீர்திருத்த திருமணம்

ஓமலூர் வரத நிலயத்தில் 15-7-45-ல் சேலம் எ. இராமசாமி கவுண்டர் எம். எ., எல். டி. அவர்கள் தலைமையில் தோழர் டி. சுந்தரம்—சகதாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. திருவாளர்கள் பி. ரத்தினசாமி பிள்ளை, சி. ஜி. நெட்டோ எம். எ., பி. எல்., ஜெயராமன், S. ராஜகோபால் செட்டியார், நாராயணசாமி, தேவநேசப் பாவலர் முதலியவர்கள் திருமணம் பற்றி விரிவுரையாற்றினர்கள். மாலையில் நடிகர் பி. எஸ். கோவிந்தன் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது

சென்னையில் நீங்கள் தங்குவதற்கு சௌகரியமிகுந்த விடுதி

கலைவள்ளல் S. K. சுந்தரம் அவர்களின்

ஹோட்டல் எவரஸ்ட்

ரயில்வே ஸ்டேஷன், பஸ், டிராம், டாக்ஸி அத்தனையும் அருகருகே! இயற்கையான கடற்காற்றை எல்லா அறைகளிலும் நுகரலாம்

# நகரதூதன்

திருச்சி 22-7-45.


## ஸி. ஆர். நோட்டீஸ்

‘ராஷ்டிரபதி’ ஆஸாத், ‘ஸ்ரீஜத்’ ஜவஹர், ‘மகாத்மா’ காந்தி எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கட்டும். ஸி. ராஜகோபாலாச்சாரி சொல்லுவது மட்டும் அலாதியான தினுசில்தானிருக்கும். ‘ஸிம்லா மகாநாடு தோற்றது’, ‘வேவல் திட்டம் முறிந்தது’ என்பதாகவே மற்ற எல்லாரும் சொல்லிவருகிறார்கள். ஆனால் ஸி. ஆர். மட்டும் அதைப் பூரணமாக ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சொல்கிறார், வேவல் திட்டம் தோல்வியுறவில்லை, அது அப்படியே இருக்கிறது என்று. தமது அபிப்பிராயத்துக்கு ஒத்தாசையான ஆதாரத்தையும் வேவல் திட்டத்திலிருந்தே காட்டுகிறார்.

புது டில்லியிலுள்ள தென்னிந்தியர் சங்கத்தில் சென்ற 19-உ ஸி.ஆர். பேசும்போது, “லார்டு வேவல் தமது திட்டம் தோற்றுவிட்டது என்று சொல்லாமல், மகாநாடு முறிந்தது என்று மட்டுமே சொல்லியுள்ளார். இதில் நுட்பமான ஒரு வித்தியாசம் இருக்கிறது. இது வெறும் வார்த்தை வித்தியாசந்தான் என்று நினைக்கக்கூடும். அப்படி அல்ல .....” என்று குறிப்பிட்டார். 1800-வார்த்தைகள் அடங்கிய வேவல் பிரசங்கத்தில் ஸி. ஆருக்குக் கிடைத்த சூக்ஷ்மமான ஆதாரம் அது. இந்த வகையில் ஸி. ஆரின் அறிவு ரொம்பக் கூர்மையோடுதான் வேலை செய்திருக்கிறது. பிரிட்டனில் புதுத் தேர்தல் முடிந்து, புது சர்க்கார் ஏற்படப்போவதால், அதன் பிறகு வேவல் திட்டம் மீண்டும் யோசனைக்குக் கொண்டுவரப்படும் என்பது ஸி. ஆர். நம்பிக்கை.

பிரிட்டனில் புது சர்க்கார் ஏற்பட்ட பின் வேவல் திட்டம் புனராலோசனைக்கு வரும் என்று கூறிய ஸி. ஆர்., இன்றைய முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கும் இருவித வழியை வைஸ்ராய்க்கு உபதேசிக்கிறார். அதாவது- மாகாணம் ஒன்றுக்கு ஒரு பிரதிநிதி வீதம், 11 மாகாணங்களுக்கும் 11-பிரதிநிதிகளை, அந்தந்த மாகாண அசம்பிளி அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமாம். சிறுபான்மை வகுப்புகளிலிருந்து 3 அல்லது 4 அங்கத்தினர்களையும் அத்துடன் இணைத்து மத்திய சர்க்காரின் நிர்வாக சபையை அமைக்கவேண்டுமாம்.

நல்ல யோசனைதான். ஆனால் ஜின்னா என்னும் ஒருவர் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே. அவர் ஒப்புக்கொள்ள வேண்டுமே. மாகாண அசம்பிளிகள் 1936ல் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதாயிற்றே என்று ஜின்னா ஆக்ஷேபிக்கத்தான் செய்வார். அதற்குப் பரிகாரம் பொதுத் தேர்தல் நடத்திவிடவேண்டியதுதான் என்றும் ஸி. ஆர். சொல்லிவிட்டார். பொதுத் தேர்தல் நடத்துவது ஸி. ஆர். கையில் இல்லையே. அதற்கு சர்க்காரல்லவா முன்வரவேண்டும்? ஜப்பான் யுத்தத்தைக்காட்டி, யுத்தத்துக்கு இது சமயமல்ல என்று வைஸ்ராய் சொல்லிவிட்டார். சர்க்கார் அதற்கும் சம்மதிக்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். ஓட்டர்கள் ஜாப்தா தயாராகவேண்டியிருக்கிறதே. இவ்வளவும் சுலபத்தில் நடக்கக்கூடிய காரியங்களா? இத்தனை சடங்குகளும் முடிவதற்குள் ஜப்பான் யுத்தமும் முடிவுக்கு வந்தாலும் வந்துவிடும். ஜப்பான் யுத்தம் தீர்ந்துபோனாலும் “தற்காலிக முட்டுக்கட்டை” தீரும் பிரச்னைக்கோ, இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்துவதற்கோ அவசியமிருக்க முடியுமா? ஆகவே ஸி ஆர். காட்டும் இந்த முதல் வழி பசிக்கு உதவாத சோறு.

அவர் கூறும் இரண்டாவது விமோசன மார்க்கம், கிரிப்ஸ் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமாம். கிரிப்ஸ் திட்டம் வாபஸ்பெறவில்லை என்பது வாஸ்தவம். காங்கிரஸ் தலைவர்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட அத் திட்டம், இப்போது அவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படும் என்பதற்கு அத்தாக்ஷி கிடைத்த பிறகல்லவா அதைப்பற்றி சர்க்கார் யோசிக்கக்கூடும். அதற்கு அனுசரணையாக காங்கிரசைக் கொண்டு ஒரு அறிக்கை வெளியிடச் செய்வாரா? ஸி. ஆருக்கு அந்தத் துடிப்பு இருக்கலாம். காங்கிரஸ் “ஹை கமாண்டுகள்” ஒப்பவேண்டுமே. ‘சபலம்’— ‘உத்தியோக ஆசை’ என்பதாகச் சொல்லிவிடப்படாது ஸி. ஆரின் துடிப்புக்குரிய காரணத்தை. காலம் தாமதிக்க தாமதிக்க புல்லுருவிகளுக்கு பவிஷ் உயர்ந்து கொண்டே போகிறது என்பதுதான் காரணம் அதிகாரம் கையிலிருந்தால், என்னென்ன காரியங்களைச் சாதிக்கலாம், அதை எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பனவற்றை அனுபவத்தில் கண்டறிந்தவரல்லவா? அதனால்தான் மற்றவர்களுக்கில்லாத அளவில் தவிதாயப்படுகிறார் ஸி. ஆர்.

“சென்னை மாகாணத்தில் கூட்டு மந்திரி சபை ஏற்படுமா?” என்று நாகபுரியில் “அ. பி.” நிருபர் கேட்டபோது, கடித்த வாய் துடைத்த மாதிரி, “இந்தக் கேள்வியை ஜின்னாவிடம் போடுங்கள்” என்று ஸி.ஆர். சொல்லிவிட்டார். ஸி. ஆருக்குக்கூட ஜின்னாவின் நடத்தையில் அலுப்புத் தட்டிவிட்டது. காங்கிரசின் ஜீவாதாரமான கொள்கையை ஜின்னாவிடம் விலைக்கு விற்றாவது மத்திய சர்க்காரில் ‘தேசிய’ நிர்வாக சபையை ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்று டாக்டர் ராஜனைப் போன்ற சிலர் சொல்லிக்கொண்டிருந்தாலும், ஜின்னாவிடம் இனி சமரசத்துக்கே இடமில்லை என்னும் அர்த்தம் தொனிக்கப் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள் காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள்.

வேவல் திட்டப்படி மத்திய சர்க்காரில் தற்காலிக ‘தேசிய’ நிர்வாக சபை ஏற்படுத்தும் முயற்சி வெகு தொலைக்கு எட்டிப் போய்விட்டதால், மாகாணங்களிலாவது—அதிலும் சென்னை ராஜதானியிலாவது 93-வது பிரிவு எடுபடவேண்டுமென்ற அக்கரை அதிகரித்துவிட்டது தோழர் ராஜகோபாலாச்சாரிக்கு. ஸிம்லா மகாநாடு முறிந்த செய்தி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படு முன் ஸிம்லாவிலுள்ள தென் இந்தியர் கூட்டம் ஒன்றில் ஸி. ஆர். பேசும்போது, ‘வடக்கே உள்ள தகராறை தெற்கேயுள்ள எங்கள்மீதும் சுமத்தி, எங்களுக்குக்கூட ஒருவித பலனும் உண்டாகாதபடி இதுவரை தடுத்தது போதும்; இனியும் காத்திருக்க முடியாது; ‘நாங்கள் விலகிக்கொள்ளப் போகிறோம்’ என்னும் அர்த்தப்பட காங்கிரஸ் தலைவர்களுக்கு சலிப்போடு எச்சரிக்கை செய்துவிட்டார். வெகுகாலமாகவே, அவர் வடநாட்டாரிடம் குட்டுப்பட்டு அலுத்துப்போன சலிப்பை இந்தப் பேச்சு காட்டிவிட்டது. மேலும் கொஞ்சகாலமாக அவருக்கு ஏற்பட்டிருக்கும் மாகாணப் பற்றையும் அந்த வாசகம் ஊர்ஜிதம் செய்வதாகவும் இருக்கிறது. ஆச்சாரியாரின் அப்பட்டமான பேச்சு இது.

**“பாஞ்சாலமும் வங்காளமும் இந்து முஸ்லிம் பிரச்னையைத் தீர்க்க முடியாது போகுமானால் அதற்காக பாக்கியுள்ள மாகாணங்களும் காத்திருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தென் இந்திய மக்கள் வட இந்திய சகோதிரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டி வரும். அதாவது குறிப்பிட்ட தேதிக்குள் உங்கள் வகுப்புத் தகராறைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தென் இந்தியா தானே தன் சொந்த விவகாரங்களைக் கவனிக்கவேண்டிய தேற்படும். அன்றியும் சுயராஜ்யத்துக்காக தனக்குத் தெரிந்த வழியிலேயே தென் இந்தியா பாடுபட்டுக்கொள்ளும்.”**

இந்த வாசகத்தில் பல உட்பொருள்கள் இருக்கின்றன. ‘தென் இந்தியாவில் இந்து முஸ்லிம் பிரச்னைக்கு இடமே இல்லை. அது வட இந்தியா சம்பந்தப்பட்ட விஷயம். இங்குள்ள இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருமித்த சகோதிரர்களாக இருக்கிறோம். பாக்கிஸ்தான் பிரிவினையால் தென் இந்திய முஸ்லிம்கள் அடையக் கூடிய லாபம் எதுவுமில்லை. உங்களுக்குள் உள்ள சமூகத் தகராறு எங்களுக்குள் இருக்கும் ஒற்றுமையை பேதப்படுத்திவிடும் போலிருக்கிறது. ஆகையால் சீக்கிரம் உங்கள் விவகாரத்தை சுமுகமாக முடித்துக்கொள்ளாவிடில், தென் இந்தியா வட இந்தியாவிலிருந்து பிரிந்துகொள்ள நேரும். அதற்கப்புறம் நாங்களே எங்கள் நாட்டுக்கு சுயராஜ்யந் தேடிக்கொள்ள முடியும். இனி நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.’

இந்த கருத்துக்கள்தான் ஸி. ஆர். வாசகத்தின் தாத்பரியம். வட இந்தியரை— குறிப்பாகக் காங்கிரஸ் தலைவர்களை மிரட்டுவதற்காக அப்படி பேசினார் என்று அவர்மீது நாம் சந்தேகிக்கவில்லை. வடநாட்டாருடன் பழகிய அனுபவத்தால், நெஞ்சறிய உணர்ந்து பேசியதாகவே கொள்ளுகிறோம். அவரது இந்த அபிப்பிராயத்தையும் நாம் மனஸ்பூர்த்தியாக வரவேற்கிறோம். அந்த வழியில், உண்மையாகவே ஸி. ஆர். தொண்டாற்றுவதென்று முடிவு கட்டிப்புறப்படுவாரானால் நாட்டில் அவருக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். ஆனால் வில்லங்கத்தை விட்டு அவர் வெளிக் கிளம்ப வேண்டுமே!

## பொதுத் தேர்தல்

ஸிம்லா மகாநாடு முடிந்த பின் முஸ்லிம் சமூகத் தலைவர்களே ஜின்னாமீது சீறி விழத்

தொடங்கிவிட்டார்கள். ஹைதராபாத்திலுள்ள டாக்டர் நவாப் ஸையத் யார்ஜங் பஹதூர் கூட "பணங்கொழுத்தவர்களும் பாமரர்களுந்தான் ஜின்னுவைத் தலைவராக ஏற்று லீகில் சேர்ந்திருக்கிறுர்களேயன்றி கல்வி அறிவு படைத்த முஸ்லிம்களுக்கும் நடுத்தர அந்தஸ்துள்ள முஸ்லிம்களுக்கும் அவர் தலைவரல்ல" என்று முஸ்லிம் செய்தி ஸ்தாபனமாகிய யுனைடெட் பிரஸ் நிருபர் மூலமாகவே செய்தி பரப்பியிருக்கிறுர்.

ஜின்னுவின் தலைமையை முஸ்லிம்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறுர்களா? இல்லையா? என்பது வேறு விஷயம். எல்லைப்புறம், பஞ்சாப், சிந்து, வங்காளம், பீகார் அஸ்ஸாம் மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களிடையே நமக்குப் பேராதரவு இருப்பதாக ஜின்னு சொல்லி வருகிறுர். அந்த மாகாணங்களிலுள்ள அசம்பிளிகளில் முஸ்லிம் லீகுக்குப் பலமில்லையே என்கின்றனர் டாக்டர் கான்சாகேப் முதல் கிஸார் ஹயாத்கான், ஹக் வரை. இப்போதுள்ள அசம்பிளி சபைகள், லாகூர் லீக் மகாநாட்டுக்கு முன் (அதாவது பாக்கிஸ்தான் பிரச்னை தோன்றுமுன்) நடந்த தேர்தல் மூலம் ஏற்பட்டவை என்றும் புதுத் தேர்தல் நடந்தால் தமது லீக் கட்சியே வெற்றி பெறும் என்றும் ஜின்னு சொல்லுகிறுர். பொதுத் தேர்தல் நடந்தால் ஜின்னுவின் ஆர்ப்பாட்டம் அடங்கிவிடும் என்று லீகைச் சேராத யூனியனிஸ்ட் முஸ்லிம்களும் தேசீய முஸ்லிம்களும் கூறுகின்றனர். யார் சொல்வது நிருபணமாகும் என்பதைத் தேர்தல் மூலம் பரிக்ஷிக்கலாமென்று இந்திய மக்கள் விரும்பினுலும் அதற்கு முட்டுக்கட்டையாய் நிற்கிறது சர்க்கார்.

பொதுத் தேர்தல் நடத்தும்படி ஜின்னு கேட்டதற்கு ஜப்பான் யுத்தத்தைக் காட்டி, பொதுத் தேர்தல் சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார் வைஸ்ராய். காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸை ஆதரிக்கும் பத்திரிகைகளுங்கூட பொதுத் தேர்தல் களியாட்டத்தில் குதித்து எழவேண்டுமென்று ரொம்ப ஆவலாதி உடையவர்களாகவே இருக்கின்றனர். இவர்களின் அபிலாஷைகளுக்கு இடைஞ்சலாக சர்க்கார் நிற்பது ஞாயமல்ல. இந்தியாவை நெருங்கி வந்த யுத்த மேகம் கலைந்துவிட்டது. பிரிட்டனின் நிலைமையிலேயே இந்தியாவும் இருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் தலைமைப் பீடத்திலேயே பெரிய பார்லிமெண்ட் தேர்தல் நடப்பதை ஜப்பான் யுத்தம் தடுத்துவிடவில்லை அதே ஜப்பான் யுத்தத்தை இந்தியா விஷயத்தில் சுட்டிக்காட்டுவதில் நியாயமே இல்லை. இப்போது, பொதுஜனங்களுக்கு பிரிட்டிஷார் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பையும் சந்தேகத்தையும் போக்குவதற்காகவாவது பொதுத்தேர்தலை நடத்த வேண்டியது அவசியம்.

நமது மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் பலவற்றிற்குத் தேர்தல் நடந்து பத்து வருஷங்கள் ஆகப்போகின்றன. துஷ்டப் பிள்ளைகள் போன்றிருந்த சில சபைகளை மட்டும் சர்க்கார் கலைத்தனர். அவற்றை நியமன மெம்பர்கள் மூலம் புதுப்பித்தனர். எல்லா சபைகளையுமே அப்படிச் செய்திருக்கலாம். அந்த முறையை சர்க்கார் கையாளாமல் விட்டதால், தேர்தல் மூலம் வந்த அங்கத்தினர்களுக்கெல்லாம் நரைத்துவிட்டது. அவர்களுடைய நிர்வாகம் சர்க்கார் கணக்குச் சரிவர இருந்தாலும், பொது ஜன சவுகரித்துக்கு நலம் பயப்பதாயில்லை. எல்லா ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கும் இவ் வருஷம் தேர்தல் நடைபெறுமென்று மக்கள் எதிர்பார்த்தனர். சமீபத்தில் வெளியான மாகாண சர்க்காரின் அறிக்கை அவற்றின் ஆயுளை மற்றோர் வருஷத்துக்கு 'மார்க்கண்ட சகாயம்' செய்துவிட்டது. ஸ்தல ஸ்தாபன சபைத் தேர்தல் நடப்பதுகூட ஜப்பான் யுத்தத்துக்கு இடைஞ்சல் செய்துவிடுமென்று சமாதானம் கூறினுல் அது பொருத்தமாகுமா?

இதுவரை போனதெல்லாம் போகட்டும். இனியாவது விரைவில் பொதுத்தேர்தல் நடப்பதற்கான மார்க்கத்தை சர்க்கார் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

## 'இந்து நேசன்' வழக்கு

'இந்து நேசன்' ஆசிரியர் எல். அனந்தய்யர், நிருபர் ரத்னசிங், ஏஜண்ட் டி. கே கோவிந்தய்யர், மற்றொரு சிவராமகிருஷ்ணன் ஆகிய நால்வர் மீதும் தொடரப்பட்ட வழக்கில் திருச்சி டவுன் சப் மேஜிஸ்டிரேட்டால் இ. பி. கோ. 506—வது பிரிவுப்படி தலைக்கு 2-மாத காவல் தண்டனை விதிக்கப்பட்ட சேதியை சென்ற வாரம் "தாகனில்" பார்த்திருக்கலாம். அவர்கள் நால்வரும் ஜாமீனில் வெளிவந்திருக்கிறுர்களாம்.

## பேனு நர்த்தனம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளாமல் இருக்கவேண்டும்" என்று சொன்னுர். சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் உண்மையான ஆர்வமுள்ள விவேகிகள் அதை ஒப்புக்கொள்ளவே செய்வார்கள். அதில் அரசியல் பேதா பேதமே இருக்கப்படாது; சு-ம கொள்கையை ஒப்புக்கொள்கிறவர் யாராயிருந்தாலும், (ஆந்திர மகா சபையைப்போல) சேர்ந்துழைக்க சவுகரியம் இருக்க வேண்டும் என்கிற பரந்த நோக்கத்துடனேயே சுயமரியாதைச் சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதில் காங்கிரஸ்காரர், ஜஸ்டிஸ் கட்சியார், சோஷியலிஸ்டு வரை சகலரும் அங்கம் வகிக்கிறுர்கள். ஆகவே அரசியல் கட்சி வேற்றுமையின் காரணமாக சுயமரியாதை இயக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கும் அனைவரும் மீண்டும் ஓடோடி வருவார்கள் என்று நம்புகிறேன். சுயமரியாதை இயக்கம் ஈ. வெ. ரா-வுக்கு மட்டும் இனி சொந்த சொத்தாக இருப்பதற்கில்லை. இப்போது அது எல்லோருக்கும் பொது உடைமையாகிவிட்டது.

* * *

சுயமரியாதை இயக்கத்தின் மாகாண மகாநாட்டை நடத்துவதற்கான பிரயத்தனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவாம். அதற்கு முன், பட்டிவீரன் பட்டியில் 5—8—45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சுயமரியாதை வீரர்கள் அடங்கிய ஆலோசனை கூட்டம் ஒன்றை தலைவர் பாண்டியன் கூட்டுகிறுர். அக் கூட்டத்துக்கு சுயமரியாதைக்காரர்கள் எல்லோரும் வரவேண்டும் என்றும் அவர் அழைக்கிறுர். ஆகவே "நாய்கள் குலைத்தாலும் பொதி மாடுகள் (ஒட்டகங்கள்) போவது நிற்காது" என்னும் ஆங்கில வசனம்போல யார் என்ன விதமான சொண்டு சொல்லிக்கொண்டிருந்தாலும் சுயமரியாதைச் சங்கம் இனி ஒழுங்காக நடைபெறத்தான் போகிறது. ரயில் புறப்பட்டுவிட்டது! சீட்டு தம்பிடமிருகிறது என்ற தெம்பில் வண்டியை விட்டு இறங்கியவர்கள் பிளாட்பாரத்திலேயே நிற்க வேண்டியதுதான். ரயில் குறிப்பிட்ட இடந் தவிர இடையில் நிற்கப்போவதில்லை.

* * *

சமுதாய மறு மலர்ச்சியில் ஆர்வ மிகுந்த வாலிபர்கள், தங்கள் ஆர்வத்துக்குத் தகுந்த இயக்கம் இல்லையே என இனி ஏங்கவேண்டியதில்லை. எல்லோரையும் இருகரங் கூப்பி அழைக்கிறது சுயமரியாதைச் சங்கம்.

* * *

• 1944 ஆகஸ்டில் ஈ. வெ. ரா. அவர்களிடமிருந்து விடுதலை பெற்றது தெ. இ. ந உரி

## 'காஸ் பிளான்ட்' (மரக்கரி மோட்டார்)

மோட்டார்களுக்கு மரக்கரி உபயோகித்து வருவதால் வருஷா வருஷம் மூன்று கோடி (3,00,00,000) காலன் பெட்ரோல் செலவு குறைந்திருக்கிறதாம்.

சென்னை மாகாணத்தில் தான் மோட்டார்களுக்கு முதன் முதலாக (1941) காஸ் பிளான்ட் இணைக்கப்பட்டதாம்.

1945 ஏப்ரல் வரை 3–கோடி ரூபாய் மதிப்புள்ள காஸ் பிளான்ட் மோட்டார்களில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

## "சிவாஜி" நாடகம்

டி. கே. எஸ். சகோதரர்களின் "சிவாஜி" சென்னை வெ. சாமிநாத சர்மா தலைமையில் 19–7–45-ல் நாமக்கல் கவிஞர் நிதிக்காக நடைபெற்றது. 'கல்கி' துணை ஆசிரியர் எம். எஸ். விஸ்வநாதன், திருநெல்வேலி இந்து கல்லூரி பேராசிரியர் அ. சீனிவாசராகவன் எம். ஏ., ஆகியவர்கள் கவிஞரின் தொண்டையும், சகோதரர்களின் கலைப் பணியையும் புகழ்ந்து பேசினர் நாடக வசூல் ரூ. 1169–8–0ம் அன்பர்கள் நன்கொடை ரூ. 31–8–0 நிதிப் பொக்கிஷதாருக்கு அனுப்பப்பட்டது.

## ஜில்லா போர்டு மெம்பர்

திருச்சி ஜில்லா போர்டு மெம்பராக செயின் ஜோசப் காலேஜ் பேராசிரியர் எ. ஹிருதயசாமி ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த ஸ்தானத்தில் முன்னர் இருந்தவர் காலஞ்சென்ற ரெத்தினசாமி படையாச்சி.

## டாக்டர் சர். முதலியார்

சர். எ. ராமசாமி முதலியாரின் யுத்த சேவையைப் பாராட்டி இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழக அதிகாரிகள் அவருக்கு 'டாக்டர் ஆப் ஸிவில் லா' என்ற கவுரவப் பட்டம் வழங்கியுள்ளார்கள். இனி அவர் டாக்டர் சர். ராமசாமி முதலியார் ஆகிறுர்.

---

மைச் சங்கம். 1945–ஆகஸ்டில் சுயமரியாதைச் சங்கமும் அவரது முஷ்டிப் பிடிப்பிலிருந்து சுதந்திரம் அடைந்துவிட்டது. கடைசியாக மிஞ்சியிருப்பது திராவிடக் கழகம். அது எப்போது சுதந்திரம் அடையப் போகிறதோ? அதற்கென்று எந்தப் புருஷன் கங்கணங் கட்டிக்கொள்ளப்போகிறுனே? அதற்கும் விமோசனம் ஏற்படத்தான் செய்யும்!

# புலிக்குப் பிறந்து நகமில்லாது போகுமா?

## அக்பரை அதிசயிக்கச் செய்த சிறுமியின் வீர மொழி ★

### ராணு பிரதாபசிம்மன் நாடிழந்து பட்டபாடு

மாலைச் சூரியனின் செவ்விய கிரணங்கள் அராவல்லி மலைச் சாரலுக்கு ஓர் அற்புதமான அழகைக் கொடுத்தன. வசந்த காலத்து மாலைக் காற்று மெல்லென வீசிற்று. இயற்கையழகு செறிந்து விளங்கிய அராவல்லி பள்ளத் தாக்குகளிலே ஓர் சிறு அருவி சல சலவென்ற சப்தத்துடன் வளைந்து வளைந்து ஓடிக் கொண்டிருந்தது.

பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் படர்ந்திருந்த புல்தரையில் ஒரு அழகிய குழந்தை உட்கார்ந்துகொண்டிருந்தது. அதற்கு நான்கு வயதிருக்கும். முகம் வாடி வதங்கியிருந்த போதிலும் அவ்விளஞ் சிறுவனது வதனம் ஓர் விதமாக ஜ்வலித்தது. பக்கத்தில் இருந்த ஒரு சிறு பாறை மீது சில புஷ்பச் செடிகளின் பக்கத்தமர்ந்து ஒரு பெண் பூக் கொய்து மாலையாகத் தொடுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு வயது பதினென்றுதான். ஆபரணம் ஒன்றும் அணியாவிடினும் அவ்விள நங்கை மிக அழகுடையவளே. பொறுமையும், சீலமும், உறுதியும் அவள் சந்திர முக மண்டலத்திலே பிரகாசித்தன.

#### புலிக் குட்டிகள்

மாலை வேளையில் மனித சஞ்சாரமில்லாத அராவல்லி மலைக் காட்டிடையே நிர்ப்பயமாய் விளையாடிக்கொண்டிருக்கும் இச்சிறுவர் ரஜபுத்ர வீரர் திலகமான ராணு பிரதாபசிம்ஹனின் குழந்தைகள். பெண்ணின் பெயர் சம்பாவதி. நாலு வயதுச் சிறுவனது பெயர் சுந்தர்சிங். ராணு பிரதாபசிம்ஹன் பிரசித்திபெற்ற சித்தூரின் அரசர். ஹிந்துஸ்தானம் முழுமையும் மொகலாய மன்னர்கள் ஆட்சி ஏற்பட்ட காலத்திலே, பிற மன்னர்கள் தங்கள் வீர ரஜபுத்ர மரபை மறந்து மொகலாய மன்னருக்கு முடி வணங்கியபோது, உயிர் போயினும் மாற்றானுக்கு வணங்கேன் என்று வீறு கூறி எதிர்த்த வேந்தர் இவர் ஒருவரே. ஆனால் அக்பர் சக்கிரவர்த்தியின் சேனை மிகப் பெரிது. ஆகவே ராணு பிரதாபர் நாடிழந்து காட்டில் வதிய வேண்டுவதாயிற்று. ராஜ மாளிகைகளில் பிறந்த சுந்தரசிங்கும், சம்பாவதியும் ஓர் சிறு குடிசையில் வசிக்கும்படி நேர்ந்தது. தங்கக் கிண்ணத்திலே பாலன்னம் உண்ட அக் குழந்தைகளுக்கு ஒரு சிறு பணியாரத் துண்டும் கிடைப்பது அரிதாயிருந்தது.

அச்சிறு அருவியின் தெள்ளிய தண்ணீரில் சிறு கற்களை எறிந்து அலைகள் உண்டாக்கும் அலையை பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான் சுந்தரசிங். சம்பாவதி அவனுக்காகப் புஷ்பங்களைப் பறித்து ஓர் மாலையாகக் கட்டிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் சென்றது. அச் சிறுவனுக்குப் பசி அதிகமாயிற்று. உடனே அழ ஆரம்பித்தான். சம்பாவதி உடனே அவனைக் கட்டிக்கொண்டு "கண்ணே, அழாதே, உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன்" என்று ஓர் முத்தம் ஈந்து சமாதானப்படுத்தினாள்.

#### பசிதீர்க்க பழங் கதை

"ஒரே ஒரு ஊரிலே ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்குப் பெரிய ராஜ்யம் இருந்தது. ஆனால் கொஞ்ச நாள் கழித்து ஒரு கெட்ட மனிதன் அவர் நாட்டைப் பிடுங்கிக் கொண்டு அவரைக் காட்டுக்கு ஓட்டிவிட்டான். காட்டிலே அவருக்குச் சாதம் அகப்படுவது ரொம்ப கஷ்டமாயிருந்தது. கடைசியில் ஒரு சிறு ரொட்டித் துண்டு கிடைத்தது. வெகு ஆசையோடு அதைச் சாப்பிடப் போனார். ஆனால் காக்காய் வெகு வேகமாகப் பறந்துவந்து அந்த ரொட்டித் துண்டை அடித்துக் கொண்டு போய்விட்டது." என்று சொல்லிக் கொண்டே போனாள். சுந்தர்சிங் அவளை இடை மறித்து "அப்போ, ராஜா அழுதாரா? இல்லையா, அக்கா? பாவம்!" என்று சொன்னான். சம்பாவதி "ராஜா என்ன அசடா, பசித்தவுடனே அழுவதற்கு!" என்றாள்.

சுந்தர்சிங் பிரகாசமான கரிய விழிகளுடன் தன் சகோதரி முகத்தை நோக்கினான். 'அப்போ, நான் அசடுக் குழந்தையா, அக்கா?' என்று கேட்டான். "ஆமாம், நீ அழுகிறாய், அழுகிற குழந்தைகள் எல்லாம் அசடுகள்தான்" என்று இறக்கமில்லாமல் மொழிந்தாள் அச் சிறுமி. உடனே சுந்தர்சிங் "நான் அசடு இல்லை. நான் ரொம்ப சமத்து ஆனால் என்ன பண்ணுகிறது. எனக்குப் பசிக்கிறது, அதனால் தான் அழுதேன்" என்று கூறினான். இதற்கு எவ்வாறு விடை கூறுவதென்பது சம்பாவதிக்குப் புலப்படவில்லை. தன் அருமைத் தம்பி பசியால் வாடவும், அச்செல்வச் சிறுவனது பசியைத் தணிக்க ஒரு கவளம் அன்னமும் இல்லாதிருக்கும் நிலையைக் கண்டு அவள் மனம் பரதவித்தது. அன்போடு அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு தன் கையிலுள்ள மலர் மாலையை அவன் கழுத்தில் இட்டாள்: சிறுவன் சற்றே சமாதான மடைந்தான். ஆயினும் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் 'ஓ' வென்று அழத் தொடங்கினான் சம்பாவதி திடுக்கிட்டு "என்ன என்ன" என்று கேட்டாள். மலர் மாலையிலிருந்து ஒரு தேன் வண்டு பசியால் வாடித் துவண்ட அச்சிறுவனது புஜத்திலே கொட்டிவிட்டது. வலியால் அக்குழந்தை துடித்தான். அவன் படும் வேதனையைக் கண்டு மனம் சகியாது சம்பாவதி கண்ணீர் விட்டாள். இருப்பினும் மனதைத் தேற்றிக் கொண்டு "வா, கண்ணே உனக்கு ஒரு ரொட்டி தருகிறேன்" என்று கூறி அவனைத் தூக்கிக் கொண்டு தூரத்தில் தென்பட்ட ஓர் குடிசையை நோக்கி நடந்தாள்.

#### ராணுவின் ஏழ்மை

அவ்வேழைக் குடிசை நாலு பக்கங்களிலும் மூங்கிற் புதரால் சூழப்பட்ட சிறு மண் கட்டிடம். மூங்கிற் புதர்களுக்கும் முள் நிறைந்த செடிகளுக்கும் இடையே ஒரு சிறு வழி மாத்திரம் வெட்டப்பட்டிருந்தது. குடிசைக்குள் ராஜா பிரதாபரும், அவர் தர்ம பத்தினி ராணி குணவதியும் உட்கார்ந்திருந்தனர். முகத்தில் கவலையும், துயரமும், களைப்பும் தென்பட்டன. பட்டாடையும் நவரத்தின அணிகளும் பூண்டிருந்த அங்கங்களில் இப்பொழுது கிழிந்த, முரட்டுத் துணிகள் துலங்கின. இருப்பினும் அவர்கள் நெஞ்சுறுதியும், ராஜபுத்திர வீரமும் சற்றும் குறையவில்லை. துயரமடைந்த மனத்தோடு மிகக் கவலையுடன் வெகு நேரம் வரை இருவரும் உட்கார்ந்திருந்தனர்.

ராணு பெருமூச்சு விட்டுப் பேசத்தொடங்கினார். "ஹே, பகவதி, இதுவும் உன் திருவருளோ? வீரச் சித்தூரின் ராணுவினிடத்தில் பசியென்று ஏற்க வந்த அதிதிக்கு அன்னமளிக்க, கூடவில்லையல்லவா! ஹே! பராசக்தி இவ்விழி நிலையும் உன் பக்தனுக்கு நேரிடுமோ! க்ஷத்திரிய குல விளக்காய், ராஜஸ்தானத்து மணியாய் விளங்கின யான் வெறுங் கையுடன் செல்லும்படியாகவா நேர்ந்தது" என்று கதறி மூர்ச்சையடைந்தார்.

#### கலங்கா உள்ளத்தின் கலக்கம்

ராணி குணவதி மிகக் கலக்கமடைந்தாள். தன் கணவரை அன்போடு நோக்கி அவரது தலையைத் தன் மடிமீதிருத்தி முன்தானையால் விசிறினாள். ராணுவும் சற்றே கண் விழித்தார். 'ராணு! தாங்கள் இவ்வாறு கலக்கமடைதல் நீதியோ? அம்பிகையின் பாதங்களில் நம்பிக்கையுள்ளவரும், வீரசிங்கமுமாகிய தாங்கள் கண்ணீர் விடுதல் தகுமா?' என்று தேற்றினாள்.

எனது அன்பே! ஆவிபோன்ற சித்தூர்க் கோட்டையை இழந்தேன். வீரத் தோழர்கள் தலைகள் குருதியில் திளைத்தன. கண்ணீர் விடவேயில்லை. என் வீர மூதாதைகள் வீற்றிருந்து ஆண்ட சித்தூர் சிங்காதனத்திலே வேற்று நாட்டான் வதிகிறான் என் மனம் சற்றும் கலங்கவில்லை! நம் புதல்வன், அருங்குணச் செல்வன், அழகிய குமாரன். பசிப் பிணியால் உயிர் நீத்தான். ஒரு துளி கண்ணீர் விட்டேனா? பச்சைப் பசுங் குழவிச் செல்வி உன் மடிமீது பசியால் வாடி உயிர் நீத்தாள். நான் சற்றாவது கலங்கினேனா? அன்றலர்ந்த மலர்போன்ற மெல்லிய வதனம் நடு வெயிலில் காயும் ரோஜா இதழெனக் கருகுகின்றது. இதற்கெல்லாம் நான் சற்றும் வருந்தியதுண்டா? ஆனால் ஹே! ஈஸ்வரி!! சாமுண்டி எங்குல தேவி! ஓர் அதிதியை வெறுங் கையுடன் திரும்பிப் போகும்படி செய்வது நீதியோ!" என்று ஆகாயத்தை நோக்கியவாறு கதறி மறுபடியும் மூர்ச்சையாய் விட்டார்.

#### கடைசி ரொட்டித் துண்டு

அப்பொழுதுதான் சம்பாவதி தம்பியைத் தூக்கிக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள்.

"சம்பா, இச்சமயத்தில் ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டாள் ராணி.

"இல்லை அம்மா, தம்பியைக் குளவி கடித்துவிட்டது. அவன்

(7-ம் பக்கம் பார்க்க)

ஐந்து லாந்தர் பீடி 47 வருஷங்களாக புகழ் பெற்று வரும் ஜலால் பீடி
சேலம்
M·S·A & A·S·J
பீடிகளை உபயோகியுங்கள்
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை!
A. சையத் ஜலால் சாஹெப்
ஜலால் பில்டிங்ஸ்..... சேலம்.
TRADE MARK REGD- Nº 785 M.S.A
TRADE MARK S A J REGD Nº 597 TEL- JALAL - SALEM.

## புலிக்குப் பிறந்து நகமில்லாது போகுமா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ரொம்ப அழுதான். குடிசையைச் சுற்றி காட்டலாம் என்று தூக்கிக்கொண்டு வந்தேன். அப்பா அதிதியைப்பற்றி சொன்ன சப்தம் கேட்டதும் இங்கு வந்தேன்'' என்று கூறினாள் சம்பாவதி.

''ஓகோ! ஒட்டுக் கேட்கும் வழக்கம் வேறே பிடிபட்டிருக்கிறதா உனக்கு'' என்று ராணி கோபமாகக் கேட்டாள்.

''இல்லையம்மா! அதிதி பட்டினியுடன் திரும்பிச் செல்லுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு ஆகாரம் கொடுக்கலாம் என்றுதான் வந்தேன்'' என்று தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே கூறினாள் அச்சிறுமி.

இதைக் கேட்டதும் ராணா ஆவலுடன் எழுந்திருந்து ''உன்னிடம் அதிதிக்கு உணவு கொடுக்க என்ன இருக்கிறது?'' என்று கேட்டார். கொஞ்ச நாழிகை பொறுங்கள் என்று கூறிவிட்டுச் சம்பாவதி வெளியே ஓடினாள்.

சுந்தர்சிங் தூங்கிவிட்டான். பசிப் பிணியால் வாடி வெகு நாழிகை அழுததால் அவனை நித்திரை அமுக்கிற்று. சம்பாவதி சில நிமிஷங்களில் இரண்டு ரொட்டித் துண்டுகளுடன் திரும்பி வந்தாள். ராணா மிகச் சந்தோஷங் கொண்டு 'இது ஏது' என்று கேட்டார். ''நேற்றிரவு எனக்குப் பசிக்கவில்லை. ஆகலால் இவ்விரண்டு ரொட்டிகளையும் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இன்று காலையிலும் சில பழங்களைத் தின்றுவிட்டேன். எனக்குப் பசி இல்லை. ஆகையால் அதிதிக்கு இதை இட்டு உபசரிக்கலாம்'' என்று மகிழ்வுடன் கூறினாள். உண்மை இதல்ல. சம்பாவதிக்கும் பசி அதிகம்தான். இருப்பினும் சுந்தர்சிங் பசியால் வாடுவதைக் காண அவள் மனம் சகிக்கவில்லை. ''வீட்டில் இருக்கும் கடைசி ரொட்டித் துண்டு அதுதான். மறு நாள் ஒன்றும் கிடைக்காது. சுந்தர்சிங் பசியால் வாடுவான். இந்தத் துண்டுகளை நாம் சாப்பிடாமல் வைத்திருந்தால் நாளைக் குழந்தை பசித்து அழும்போது அதற்குக் கொடுக்கலாம்'' என்று எண்ணியே பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். இப்பொழுது சுந்தர்சிங்கும் அழுது, அழுது அலுத்துப் போய்த் தூங்கிவிடவே, அதிதிக்கு அந்த ரொட்டியைக் கொடுக்க சிறுமி முன் வந்தாள்.

### சம்பாவதி மூர்ச்சை

ராணா பிரதாபரும் ராணி குணவதியும் அளவில்லா மகிழ்ச்சியடைந்தனர். அவளைத் தழுவி அன்புடன் முத்தமிட்டனா.

இதற்குள் அதிதியும் வந்துவிட்டார். அதிதிக்குச் சுமார் 50-வயது இருக்கலாம். கம்பீரமான உருவம். காஷாய அங்கி அணிந்திருப்பினும் அவர் முகமும் கண்களும் சுடர்விட்டுப் பிரகாசித்தன. சம்பாவதி அவரை உபசரித்து ஆசனத்திலமர்த்தி, ஓர் வாழை இலையில் ரொட்டித் துண்டுகளும் துவையலும் ஓர் பாத்திரத்தில் சுத்த ஜலமும் கொண்டு வந்து வைத்து, உண்ணும்படி நமஸ்கரித்தாள். நாணத்துடன் தலையைக் கவிழ்ந்த வண்ணம் ''சுவாமி விதிவசத்தால் ராணாவின் வீட்டில் கேவலமான அன்னத்தை அளிக்கவேண்டியிருக்கிறது. தங்களுக்கு எவ்வாறு இச்சிறு உணவு பிடிக்கப் போகிறது'' என்று அன்பொழுகக் கூறினாள்.

''குழந்தாய், அன்புடன் இட்டது கூழாயினும் தங்கக் கலசத்தில் உண்ணும் அமிர்தத்திற்கு மேலானது. மேலும் சந்நியாசியாகிய எனக்கு உகந்தது இவ்வெளிய உணவே'' என்று மகிழ்வுடன் கூறினார். சாப்பிட்டு முடிந்தவுடன் ''ராணாவைத் தரிசிக்க இன்றிரவு வருகிறேன்'' என்று கூறி சம்பாவதியை ஆசீர்வதித்துச் சென்றார். அதிதி சென்றதும் சம்பாவதி மிக்க திருப்தியடைந்தாள், அதிதியின் பசி தீர்க்க முடிந்தது பற்றி தேவியைத் தொழுதாள். அவள் கண்களிலே ஓர்வித பிரகாசம் ஜ்வலித்தது. ஆனால் அடுத்த நிமிஷமே அயர்ந்து கீழே சாய்ந்து மூர்ச்சையானாள். உருக்குப் போன்ற உறுதியுள்ள நெஞ்சமாயினும் பசிப் பிணியை எவ்வளவு நாள் எதிர்த்து நிற்கும்!

எங்கும் அமைதி நிலவியது. அராவல்லியின் மலைச்சாரலிலே காரிருள் கவ்வியது ஒரு சிறு சப்தமும் கிடையாது. வானத்திலே மேகங்கள் கூடிச் சந்திரனை மறைத்து நின்றன. பிரதாபசிம்ஹன் ஏழைக் குடிசையிலே மினுக் மினுக்கென்று ஓர் சிறு விளக்குமட்டும் எரிந்துகொண்டிருந்தது. தரையிலே ஓர் கோரைப் பாய்மீது ஓர் சிறு உருவம் தென்பட்டது. அவள் தான் மரணத்தருவாயிலிருக்கும் வீரச் சிறுமி சம்பாவதி. தன்னலம் சிறிதுமின்றி தன் கடைசியன்னத்தையும் அதிதிக்கென்று, பண்டை நாளில் சிபிச் சக்கிரவர்த்தி புறாவிற்குச் சதையீந்தவாறு, கொடுத்துவிட்ட அச்சிறுமியின் காலம் கிட்டிவிட்டது. பக்கத்தில் ராணாவும் குணவதியும் கவலை கொண்ட உள்ளத்துடன் உட்கார்ந்திருந்தனர். குழந்தை சுந்தரசிங் அப்பொழுதுதான் கண்ணைத் துடைத்துக்கொண்டே எழுந்தான்.

மெதுவாக அம்மாவிடம் வந்து அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு ''அம்மா, சம்பா ஏன் இம்மாதிரி படுத்துக் கொண்டிருக்கிறாள்'' என்று தன் குழலை மொழியில் கேட்டான். ''சம்பா தூங்குகிறாளப்பா. வேறு ஒன்றுமில்லை'' என்று சமாதானம் கூறினாள் ராணி. குணவதி ஹா! அவ்வாறு உண்மையை மறைத்துப் பசுங்குழவிக்குப் போய் கூறும்பொழுது அக்குணவதியார் மனம் பட்ட பாட்டைக் கடவுளே அறிவர்.

### ராணாவின் யோசனை

சிறிது நேரம் சென்றது. பெருங் காற்று வீசத் தொடங்கிற்று. மேகங்களும் சிறிது கலைய ஆரம்பித்தன. சந்திரனின் மங்கலான கிரணங்கள் கூரையிலுள்ள சிறு துவாரங்களின் வழியாக அக்குடிசைக்குள் பிரவேசித்தன.

ராஜா பிரதாபர் குணவதியை நோக்கிப் பேசத் தொடங்கினார். ''அக்பருக்கு நாம் என்ன பதிலை அனுப்புவது? அவர் மிகப் பெருந்தன்மை பூண்டவர். நமது செல்வச்சிறார்கள் படுங் கஷ்டத்தைக் கேட்டுக் கண்ணீர் உகுத்தாராம். அவ்வாறே நம் கஷ்டங்களை அவர் உணர்ந்து வெகுவாக வருத்தப்படுகிறாராம். பெயரளவில் அவருக்கு உட்பட்டவர்களென்பதை நாம் ஒப்புக்கொண்டால் போதுமாம். நாட்டையும், ராஜீய கைதிகளையும் விட்டுவிடுகிறேன்; வேறு ஒரு நிர்ப்பந்தமும் கிடையாதென்று சொல்லியனுப்பியிருக்கிறார். இதற்கு என்ன பதில் கூறுவது?'' என்று கேட்டு முடித்தார்.

வெளியிலே ஏதோ காலடி சப்தம் கேட்டது. 'யாரது'? என்று ராணா கேட்டார். ஒரு பதிலையும் காணோம்.

''காற்றில் இலைகள் அசையும் சப்தம் வேறொன்றுமில்லை'' என்றாள் குணவதி.

''பெருந்தகைமை கொண்ட அக்பரிடம் இருந்துவந்த தூதுவனாகும் என்று நான் நினைத்தேன்'' என்று கூறினார் ராணா.

### சுதந்திரம் உயிரினும் இனிது

''அக்பர் என்ற பெயரைக் கேட்டதும் பாயின்மீது கிடந்த உருவம் சற்றே அசைந்தது. உயிர்போகும் தருணத்தில் இச்செய்தியைக் கேட்டதும் சம்பாவதி தன் பலமெல்லாவற்றையும் சேர்த்துப் பேச முயன்றாள். ''தந்தையே, இன்று நீர் அக்பரின் பெருந்தன்மையைக் கொண்டாடுகின்றீர். நாளை அவர் கீழ் உயர்ந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுவீர். அதன் பின் அவருடைய அடிமையாயிருப்பதில் மிகப் பெருமைகொள்ளுவீர்! ஆனால் இதை மறக்காதேயும்; என்று நீர் அக்பரின் ஈகையை மெச்சி ஏற்றுக்கொள்ளுகின்றீரோ அன்றே நம் வீர வாழ்வு குன்றிவிடும். ராஜபுதனத்து வீர வாழ்க்கை, ஒப்புயர்வற்ற சுதந்திரம் நாசமாய்விடும். அக்பர் என்ன சொன்னார்? ராணாவின் குழந்தைகள் நிலைக்கு இரங்குவதாகக் கூறினார். ஐயோ பாவம், ராணாவின் சிங்கக் குட்டிகளின் மனப்பான்மை அன்னியரான அவருக்கு எவ்வாறு தெரியும்? அடடா! ஹல்திகட்ட யுத்தகளத்தில் பெருக்கெடுத்து ஓடிய ரத்தப் பிரவாகத்தை இதற்குள்ளாகவா அக்பர் மறந்துவிட்டார்''? என்று கேவலமாகக் கூறினாள்.

குணவதி தன் அருமை புத்திரிக்கு ஜன்னி பிறந்துவிட்டது என்று பயந்தாள். அன்புடன் தன் கையால் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். இதைக் கண்ட சம்பாவதி சற்றே புன்முறுவல் கொண்டாள். ''அம்மா இல்லை; நான் ஜன்னியில் பிதற்றுவதாக எண்ணிவிடாதே. தந்தையே, சுதந்திரம் உயிரினும் இனிது. அக்பருக்கு அடிமைப்படாதீர்'' என்று வேண்டினாள்.

ராணா பிரதாபனுக்கு பழைய ஊக்கமும், உறுதியும் திரும்பி வந்தன. அந்த இளஞ் சிறுமியின் தீரமும் அவருக்கு எல்லையற்ற படைகளெனப் பலம் தந்தது.

''வனிதா ரத்தினமே! வீரச் செல்வி! உன் வேண்டுகோள் என் இதயத்தை உருக்குகிறது. நூறு கோடி மாந்தர் வந்தெதிர்த்த போதிலும் இனி சித்தூரைக் காக்கப் போர் புரியச் சிறிதும் பின்வாங்கேன். உன் சிறு கண்கள் முன்பாகப் பிரதிக்ஞை செய்கிறேன். உன்போன்ற நாரீமணிகள் நாட்டில் இருக்கும் வரை நம் சுதந்திரத்திற்கு எந்நாளும் பங்கம்வராது. அக்பருக்கு நான் எந்நாளும் தலை வணங்கேன். இது சத்தியம்' என்று வீராவேசத்துடன் மொழிந்தார்.

'நிச்சயமாகவா?' என்று ஈனஸ்வரத்துடன், ஆவலுடன் அச்சிறுமி தன் தலையை உயர்த்திக் கேட்டாள்.

'ஆம்; நிச்சயமாக' என்று கணீரென்று, கம்பீரமான ஓர் தொனி பிறந்தது. யாவரும் திடுகிட்டுத் திரும்பினர். காஷாய உடையணிந்த அக்பர் சக்கிரவர்த்தியே அவர்கள் முன்னிலையில் வந்து நின்றார்,

### வந்தது யார்?

'ஆ இன்று மாலை உணவருந்திய அதிதி இவரே!' என்று கூவினள் சம்பாவதி.

அக்பர் சக்கிரவர்த்தி உடனே 'ராஜபுத்திர சிம்ஹமே! உம் குழந்தைகளின் ஒப்பற்ற தைரியத்தை நான் எங்குமே கண்டதில்லை. இந்துஸ்தானமெங்கும் இம்மாதிரியான உறுதி கொண்ட சிறு உள்ளத்தை இதுவரை கண்டேனில்லை. உமது வீரத்தையும் தேச பக்தியையும் மெச்சினேன். உமது சுதந்திரத்திற்கும் நாட்டிற்கும் இனி எந்நாளும் பங்கம் வராது. ஒரு நிபந்தனையுமின்றி சித்தூர் உம்முடையதே' என்று கூறினார்.

அவ்விரு வீரச் சக்கிரவர்த்திகள் கண்களிலும் நீர்த்துளிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

Regd. No. M. 4606. City Herald.

## பேனா நர்த்தனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதாக சில தோழர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது உண்மையானால், இதுவும் சென்னையில் இப்போது தாளம் போடும் போலி ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம்போல, ஒரு போலி சுயமரியாதைக் கட்சியின் தாளம் என்றும், இதற்காக யாரும் கவலைப்படவேண்டியதில்லை என்றும், ஏற்கனவே இருந்து வருகிற சுயமரியாதைச் சங்கம் அதன் பாட்டில் வேலை செய்துவரும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்......யாருடைய போலித் தன்மையும் போட்டித் தன்மையும் அவற்றிற்கு எவ்வித இடையூறும் விளைவித்துவிட முடியாது. ஆதலால் இயக்கப் பற்றுள்ள யாவரும் எவ்விதக் குழப்பமும் கொள்ளவேண்டியதில்லை." என்று எழுதுகிறார் ஈ. வெ ரா. அசட்டுத் தைரியம் காட்டுவதில் அவருக்கு மிஞ்சுபவர் தமிழ்நாட்டில் வேறு யாருமில்லை என்பதற்கு இது ஒரு சாம்பில் என்பதாகவே நான் மதிக்கிறேன்.

* * *

"சீட்டு என்னிடம் இருக்கும்போது ரயில் எப்படிப் புறப்பட முடியும்" என்று நினைத்த மலையாளப் பிரயாணியின் புத்திசாலித்தனத்துக்கும், "சுயமரியாதைச் சங்கம் ரிஜிஸ்டர் செய்துகொண்டிருப்பதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை; குழப்பமும் கொள்ள வேண்டியதில்லை" என்று சொல்லும் ஈ. வெ. ரா-வின் கூற்றுக்கும் கொஞ்சமாவது வித்தியாசம் இருக்கிறதாவென்று நீங்களே சொல்லுங்கள்.

* * *

பொதுஜன இயக்கத்தைத் தமக்குச் சொந்தமான பிதிரார்ஜித சொத்தாக பிரயோசனப் படுத்திக்கொள்வோர் சங்கம் ஒன்று ஏற்படுமானால் அதன் தலைவராக இருப்பதற்கு ஈ. வெ. ரா. ஒருவருக்குத்தான் யோக்யதை உண்டு. தானும் செய்யாமல் பிறரையும் செய்ய விடாமல் தஞ்சாவூர் பெரிய கோயில் நந்திபோல அவர் குறுக்கே கிடக்கிறாரே என்பதற்காகத்தான் சுயமரியாதைச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்தாக வேண்டும் என்ற அவசியத்துக்கு அத் தலைவர்கள் வந்திருக்கக்கூடும் என்றே நினைக்கிறேன். சங்கம் ரிஜிஸ்டர் ஆன பிறகுங்கூட "ஏற்கனவே இருந்து நடந்துவரும் சுயமரியாதை இயக்கம் தன்பாட்டில் வேலை செய்துவரும்" என்று ஈ. வெ. ரா. எழுதியிருப்பதிலிருந்து சொஸைட்டி ஆக்டின் தாத்பரியத்தை உணராதபடியே அப்படி அவர் எழுதியுள்ளார் என்றும் நினைக்கிறேன். அல்லது அந்த சட்டத்தை மீறி, அதை உதாசீனப்படுத்தி தமது பிடிவாதத்தை சாதித்துக்கொள்வது என்று அவர் முடிவு செய்திருந்தாலும் இருக்கலாம். இது அவருக்கு சகஜம். ஆனால் மற்றவர்கள், அவர் கூறும் அசட்டுத்தனமான பாதையில் போய் அவஸ்தைப்படாமல் ஜாக்கிரதையாயிருந்துகொள்ளவேண்டும்..

ஃ ஃ ஃ

சுயமரியாதைச் சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால், அந்த சங்கத்தைத் தழுவியே இதர கிளைச் சங்கங்களும் இருந்துவர வேண்டும். அதற்கு விரோதமாக, சுயமரியாதைச் சங்கத்தின் பெயரால் நடப்பவை சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று பிரகடனப் படுத்தப்படுவதற் கிடமுண்டு. ஈ. வெ. ரா. சொல்லைக் கேட்டு, ரிஜிஸ்டர் சங்கத்தின் அங்கீகாரமின்றி சுயமரியாதையின் பேரால் நடைபெறும் போலிச் சங்கங்களையோ கூட்டங்களையோ தடுப்பதற்கு சட்ட விதிகளின்படி அதிகாரமுண்டு. ஆகவே ஆத்திரத்தால் ஈ. வெ. ரா-வே சொல்லுவதை மற்றவர்கள் நம்பி அவர் வழியைப் பின்பற்றினால், முன்னால் நிற்பவர்கள் நாலுக்கும் உட்பட்டாகவேண்டிய தேற்பட்டுவிடும்.

* * *

அரசியல் போராட்டத்தினிமித்தம் சர்க்கார் சட்டத்தை மீறுவதும் சிறை செல்வதும் பாராட்டப்படலாம். ஆனால், நெறி முறையோடு மக்கள் வாழ்வதற்குப் பழகவேண்டுமென்ற பெருங் காரணத்துக்காக செய்யப்பட்டுள்ள விதிகளை, சொந்த லாப நஷ்டத்தை உத்தேசித்து, அனாவசியமாக மீறுவதென்பது ரொம்ப மட்டமான நடத்தை. ஈ. வெ ரா. அவர்களோ இந்த ரெண்டுவிதமான சட்டங்களையும் மீறுவதில் பழுத்த அனுபவசாலி. கடன் கொடுத்தவனுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாகாது என்னும் கருத்துடன், சிவில் ஜெயிலை ஒழிக்கப்போகிறேன் என்பதாக, ஒரு காகிதக் கடைக்காரர் அவர்மீது எடுத்த சிவில் வாரண்டை சாக்காகக் கொண்டு, சிவில் ஜெயிலுக்குப் போய் வந்தவர் ஈ. வெ. ரா. ஆகையால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள சங்கத்துக்குப் போட்டியாக சங்கம் அமைக்கவும் தலைக்கு நாலணா வீதம் சந்தா வசூலிக்கவும் ஈ.வெ.ரா. துணிச்சல் கொள்ளலாம். அதனால் ஏற்படும் பலாபலன்களையும் அனுபவிக்க அவர் தயாராயிருக்கலாம். ஆனால மற்றவர்கள் அவரைப் பின்பற்றினால் பிற்கூறில் சங்கடப்பட நேரும் என்பதை முன்கூட்டியே தெரிவித்துவிட விரும்புகிறேன்.

* * *

சுயமரியாதை இயக்கத்தில் ஆதிமுதல் ஈ. வெ. ரா. ஈடுபட்டவராயிற்றே, ஒரு வகையில் அவர் சுயமரியாதை இயக்கத்தின் கர்த்தாவாயிற்றே; அவரை விலக்கிவிட்டு. அவர் இல்லாமலே சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யலாமா? என்று சிலர் கேட்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கு ஒரே பதில்தான் சொல்ல முடியும். அதாவது, 'அதற்குக் காரணம் அவரே (ஈ. வெ. ரா.) தான்.' அவரை விலக்கி சுயமரியாதைச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யும்படியான நிலை ஏற்பட்டதற்கு காரணங்கள் பல உண்டு. அவற்றில் கடைசியாக 26—5—45-உ 'வவ்வால்கள்' என்ற தலைப்புடன் குடிஅரசில் அவர் எழுதியிருந்த தலையங்கத்தையும் ஒரு காரணமாகக் கொள்ள வேண்டும். அதைப் படிக்கும்போது நியாய புத்தியுள்ள ஒவ்வொரு சுயமரியாதைக்காரனுக்கும் நெஞ்சு குமுறாமலிருக்க முடியாது. இயக்கப் பற்றுள்ள மற்றவர்களை அவர் எவ்வளவு துச்சமாக மதிக்கிறார், எவ்வளவு உதாசீனமாகக் கருதுகிறார், எவ்வளவு ஆணவமாகவும் நெஞ்சழுத்தத்தோடும் தூற்றுகிறார் என்பதற்கு அந்தத் தலையங்கமே சாக்ஷி.

* * *

யார்தானாகட்டும், துளிப் பிரமாணமாவது சுயமரியாதை இருப்பவர்களாயிருந்தால், அவர்கள் ஈ. வெ. ரா-வுடன் சேர்ந்து வேலை செய்யவே சம்மதிக்கமாட்டார்கள். ஈ. வெ. ரா-வினுடைய சொல்லும் செயலும் எழுத்தும் முன்னிருந்ததற்கு மாறாக மிகமிகக் கீழ்த்தரமாகிவிட்டன. அவ்வாறு கெட்டுப் போனதற்குக் காரணம் அவரது உடல் நிலையாகத்தான் இருக்கக் கூடும். ரத்தக் குறையக் குறைய பொறுமை, பொச்சாப்பு, கோபம், சுயநலம், அவநம்பிக்கை முதலிய குணங்கள் அத்தனையும் மேலோங்கிவிட்டன. இனி அவர் எந்த இயக்கத்தையுமே தலைமை வகித்து நடத்துவதற்கு லாயக்கற்றவராகிவிட்டார் இந்த நிலையில் அவரைச் சேர்த்து வேலை செய்வதென்பது வரைக் கோட்டடையில் பெருச்சாளியை வைத்துக் கட்டுவதற்குச் சமமாகவே முடியும். அதனாலேயே அவர் இல்லாதபடியே சுயமரியாதைச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்தார்கள் என்று நான் நினைக்கிறேன். இதை புத்திசாலித்தனமான ஏற்பாடுகளில் ஒன்றாகவும் மதிக்கிறேன்.

* * *

காரியதரிசி தோழர் எஸ். ராமநாதன் சென்ற மே மாதம் வெளியிட்ட அபிப்பிராயம் ஒன்றில், "கலாச்சார இயக்கமான சுயமரியாதைச் சங்கம் எந்த அரசியல் கழகத்திலும் நேரான சம்பந்தம் வைத்துக்

(5-ம் பக்கம் பார்க்க)

## புலிக்குப் பிறந்து நகமில்லாது போகுமா?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தழம்பின். பத்து விநாடிகள் வரை எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. காற்றின் வேகமும் தணிந்து விட்டது. அக்பர் பிரதாபசிம்ஹனைத் தழுவிக்கொண்டார்.

"வீர நண்பரே, இனி எந்நாளும் நான் உமது நண்பன் என நினைத்துக்கொள்ளும். நான் போய் வருகிறேன்" என்று அந்த ராஜஸ்தானத்து சிம்ஹத்தினிடம் கை குலுக்கிவிட்டு அடி எடுத்து வைத்தார்.

திறந்திருந்த கதவின் வழியாக குப்பென்று காற்று அடித்தது. சிறிய விளக்கு அணைந்து விட்டது மங்கலான வெளிச்சத்தில் பாயின்மீது இருந்த உருவம் சிறிதே அசைவுற்றது நன்கு புலப்பட்டது அக்பரும், ராணாவும் சம்பாவதியை நோக்கினர். சந்திர வெளிச்சத்திலே, ஹிமாசலத்தின் பனிச் சிகரங்களின் வெண்மைபோல திகழ்ந்தது அவளது அழகிய முகம். அவ்வீரச் சிறுமியின் உள்ளத்தே நிலவிய உயிர் நீங்கி விட்டது!

சென்னையிலுள்ள பட்டணம் பொடித் தொழிற்சாலைகளில் மிகப் பெரிது
என். வி. ஷண்முகம்
கம்பெனியாரின் ஸ்பெஷல் பட்டணம் பொடி
உத்தமப் பெரியார்கள் போற்றும் உயர்தரப்பொடி. காரம், மணம், குணம், நிறம், வாடை இவ்வைந்தும் ஒருங்கே கமழ்வது. நாசிக்கு நறுமணம், மனதிற்கு உற்சாகம்.
வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் கனவான்களுக்கு சில்லரையாகவும் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

Edited and Published by T. M V nkatachalam and Printed at "Asoka Press". Teppakulam. Trichinopoly.